| English | Tamil |
|---|---|
| **Border Closures** | **எல்லையை மூடுதல்** |
| From 12:01am on Wednesday 8 July 2020 the ACT will be closing its border for anyone travelling into the ACT from Victoria, unless they have an exemption to enter. | *2020 ஜூலை 8 புதன்கிழமை அதிகாலை 12:01 மணி முதல் விக்டோரியாவிலிருந்து எவரும் ACT-க்குள் பயணிக்கமுடியாதபடி ACT அதன் எல்லையை மூடுகிறது. உள்நுழைவதற்கான அனுமதி உள்ளவர்களுக்கு விதிவிலக்கு உண்டு.* |
| All ACT residents are approved to return their home, subject to entering quarantine for a period of 14 days, from the day after leaving Victoria. | *வீடு திரும்ப அனுமதிக்கப்படும் அனைத்து ACT குடியிருப்பாளர்களும் விக்டோரியாவை விட்டு வெளியேறிய நாளிலிருந்து 14 நாட்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்பட நேரிடும்.* |
| Details on exemptions, special conditions for essential services and other matters will be available on this website soon. | *விதிவிலக்குகள் குறித்த விபரங்கள், அத்தியாவசிய சேவைகளுக்கான சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பிற விவரங்கள் விரைவில் இந்த இணையத்தளத்தில் கிடைக்கும்.* |
| **For ACT residents returning from Victoria** | **விக்டோரியாவிலிருந்து திரும்பும் ACT குடியிருப்பாளர்களுக்கு** |
| All ACT residents returning from Victoria will be required to enter quarantine for a period of 14 days from the day after leaving Victoria. | *விக்டோரியாவிலிருந்து திரும்பும் அனைத்து ACT குடியிருப்பாளர்களும், விக்டோரியாவை விட்டு வெளியேறிய நாளிலிருந்து 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தலுக்கு உட்பட வேண்டும்.* |

| | |
|---|---|
| All returning ACT residents must notify ACT Health of their intent to return to the ACT. Residents must provide the following details to COVID.Exemptions@act.gov.au: | திரும்பிவரும் அனைத்து ACT குடியிருப்பாளர்களும் ACT-க்குத் திரும்புவது குறித்த தமது தீர்மானத்தை ACT Health-க்கு அறிவிக்க வேண்டும்.<br>குடியிருப்பாளர்கள் COVID.Exemptions@act.gov.au க்கு பின்வரும் விவரங்களை வழங்க வேண்டும்: |
| 1. Name<br>2. Date of birth<br>3. Home address<br>4. Phone number<br>5. Email address<br>6. Travel details (flight number, by car etc)<br>7. Date of entry to ACT<br>8. Date you were last in Victoria<br>9. Details of address of where you plan to quarantine in the ACT. | 1. பெயர்<br>2. பிறந்த தேதி<br>3. வீட்டு முகவரி<br>4. தொலைபேசி எண்<br>5. மின்னஞ்சல் முகவரி<br>6. பயண விவரங்கள் (விமான இலக்கம், கார் மூலம் எனில் அது குறித்த விவரம் போன்றவை)<br>7. ACT-க்குள் நுழையும் தேதி<br>8. நீங்கள் கடைசியாக விக்டோரியாவில் இருந்த தேதி<br>9. நீங்கள் ACT-இல் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக திட்டமிட்டுள்ள இடத்தின் முகவரி விவரங்கள். |
| Please note that if you plan to quarantine at a private residence, it needs to allow for appropriate separation from other household members who are not in quarantine. Household members in quarantine would ideally have a separate bedroom, bathroom and should avoid spending time in communal spaces at the same time as other people in the home who are not in quarantine. If this can't be done you will be required to quarantine in a hotel or other approved premises. ACT Health can assist in providing details of suitable accommodation which you can book (at your own expense). Please note that we will require evidence of a valid booking if you are using hotel accommodation for quarantine purposes. | நீங்கள் ஒரு தனியார் இல்லத்தில் தனிமைப்படுத்தலுக்குள்ளாகத் திட்டமிட்டால், தனிமைப்படுத்தலில் இல்லாத மற்ற வீட்டு உறுப்பினர்களிடமிருந்து விலகியிருப்பதற்கு ஏதுவான இடமாக இருக்க வேண்டும்.<br>தனிமைப்படுத்தப்பட்டுள்ள வீட்டு உறுப்பினர்கள், தனி படுக்கையறை, குளியலறை ஆகியவற்றைக் கொண்டிருப்பர். மேலும் வீட்டிலுள்ள பொதுவான இடங்களில் தனிமைப்படுத்தலில் இல்லாத மற்றவர்கள் இருக்கும் நேரங்களில் அங்கிருப்பதைத் தவிர்க்க வேண்டும்.<br>இதைச் செய்ய முடியாதபட்சத்தில் நீங்கள் ஒரு ஹோட்டல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிற வளாகங்களில் தனிமைப்படுத்தப்பட வேண்டும்.<br>நீங்கள் முன்பதிவு செய்யக்கூடிய (உங்கள் சொந்த செலவில்) பொருத்தமான தங்குமிட விவரங்களை வழங்குவதில் ACT Health உதவும்.<br>தனிமைப்படுத்தப்படும் நோக்கங்களுக்காக நீங்கள் ஹோட்டல் தங்குமிடத்தைப் பயன்படுத்துகிறீர்கள் என்றால், முன்பதிவு செய்யப்பட்டதற்கான சரியான சான்றுகள் எங்களுக்குத் தேவைப்படும் என்பதை நினைவில் கொள்க. |

| **Documentation to be provided**: | **வழங்க வேண்டிய ஆவணங்கள்:** |
|---|---|
| • Identification including proof of residence in the ACT.<br>• Details of a valid booking if you are using hotel accommodation for quarantine purposes. | • *ACT-இல் வசிப்பவர் என்பதற்கான ஆதாரம் உட்பட அடையாளத்தை உறுதிசெய்வதற்கான ஆவணங்கள்*<br>• *தனிமைப்படுத்தப்படும் நோக்கங்களுக்காக நீங்கள் ஹோட்டல் தங்குமிடத்தைப் பயன்படுத்துகிறீர்கள் என்றால் அதற்குரிய முன்பதிவு விவரங்கள்.* |
| **For other travellers from Victoria to the ACT** | **விக்டோரியாவிலிருந்து ACT வரும் மற்ற பயணிகளுக்கு** |
| All other travellers from Victoria to the ACT should not be travelling. | *மற்ற அனைத்து பயணிகளும் விக்டோரியாவிலிருந்து ACT-க்கு பயணம் செய்யக்கூடாது.* |
| If you have an exceptional need to travel to the ACT, you will need to apply for an exemption at least 48 hours (wherever possible) before your intended travel date. Persons entering the ACT without an exemption will be denied entry. | *ACT-க்கு பயணிப்பதற்கு உங்களுக்கு விதிவிலக்கு வழங்கப்பட வேண்டுமெனில், நீங்கள் பயணிக்க விரும்பும் தேதிக்கு ஆகக்குறைந்தது 48 மணிநேரத்திற்கு முன்னதாக (முடிந்தவரை) விதிவிலக்கு கோரி விண்ணப்பிக்க வேண்டும். விதிவிலக்கு அனுமதி இல்லாமல் ACT-க்குள் நுழையும் நபர்களுக்கு நுழைவு மறுக்கப்படும்.* |
| Exemptions will be granted only in exceptional circumstances, such as: | *விதிவிலக்குகள் தகுந்த சூழ்நிலைகளில் மட்டுமே வழங்கப்படும், அதாவது:* |
| • Visiting a critically ill or palliative care immediate family member<br>• Essential services work (to be assessed)<br>• Attending a funeral of an immediate family member<br>• Provide urgent care to an immediate family member<br>• Receive urgent medical care<br>• Leaving Victoria in air transit from another jurisdiction and did not leave the airport | • *ஒரு மோசமான உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ள அல்லது palliative care-இல் உள்ள நெருங்கிய குடும்ப உறுப்பினரைப் பார்வையிட*<br>• *அத்தியாவசிய சேவைகள் தொடர்பான வேலை (மதிப்பீடு செய்யப்பட வேண்டும்)*<br>• *நெருங்கிய குடும்ப உறுப்பினரின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வது*<br>• *நெருங்கிய குடும்ப உறுப்பினருக்கு அவசர பராமரிப்பு அளித்தல்*<br>• *அவசர மருத்துவ சேவையைப் பெறுவதற்கு*<br>• *வேறொரு இடத்திலிருந்து விக்டோரியா ஊடாக air transit செய்யும் அதேநேரம் விமான நிலையத்தை விட்டு வெளியேறவில்லை என்றால்* |

<table>
<tr><td>Exemption requests can be submitted to COVID.Exemptions@act.gov.au, and need to have the following details:</td><td>விதிவிலக்கு பெறுவதற்கான கோரிக்கைகளை பின்வரும் விவரங்களுடன் COVID.Exemptions@act.gov.auக்கு சமர்ப்பிக்கலாம்.</td></tr>
<tr><td>1. An explanation of your need to travel to the ACT<br>2. Name<br>3. Date of birth<br>4. Home address<br>5. Phone number<br>6. Email<br>7. Travel details (flight number, by car etc)<br>8. Date of entry to ACT<br>9. Details of how long you intend to stay in the ACT **<br>10. Date last in Victoria<br>11. Name and address of where you plan to stay in the ACT.</td><td>1. ACT க்கு நீங்கள் பயணிக்க வேண்டிய அவசியம் பற்றிய விளக்கம்<br>2. பெயர்<br>3. பிறந்த தேதி<br>4. வீட்டு முகவரி<br>5. தொலைபேசி எண்<br>6. மின்னஞ்சல் முகவரி<br>7. பயண விவரங்கள்((விமான இலக்கம், கார் மூலம் எனில் அது குறித்த விவரம் போன்றவை)<br>8. ACT-க்குள் நுழையும் தேதி<br>9. நீங்கள் எவ்வளவு காலம் ACT-இல் இருக்க விரும்புகிறீர்கள் என்ற விவரங்கள் **<br>10. விக்டோரியாவில் கடைசியாக இருந்த தேதி<br>11. நீங்கள் ACT-இல் தங்க திட்டமிட்டுள்ள இடத்தின் பெயர் மற்றும் முகவரி.</td></tr>
<tr><td>* ACT Health may impose certain restrictions in relation to your exemption. You will be required to follow these.</td><td>* உங்களுக்கு வழங்கப்படும் விதிவிலக்கு தொடர்பாக ACT Health சில கட்டுப்பாடுகளை விதிக்கலாம். இவற்றை நீங்கள் பின்பற்ற வேண்டும்.</td></tr>
<tr><td>** As part of its risk assessment, ACT Health will assess your proposed length of stay in the ACT. A condition of entry may be that you will be required to complete a full 14 day period of quarantine in the ACT (at your own expense). We will consult with individuals on a case by case basis.</td><td>** ACT Health இடர் மதிப்பீட்டின் ஒரு பகுதியாக ACT-இல் நீங்கள் தங்குவதற்கு திட்டமிட்டுள்ள நாட்களின் எண்ணிக்கையை மதிப்பிடும்.<br>நுழைவுக்கான நிபந்தனையாக நீங்கள் ACT-இல் முழுமையாக 14 நாட்கள் தனிமைப்படுத்தலை (உங்கள் சொந்த செலவில்) பூர்த்தி செய்ய வேண்டும் என கோரப்படலாம்.<br>தனித்தனியாக ஒவ்வொருவருடனும் இதுதொடர்பில் ஆலோசிப்போம்.</td></tr>
<tr><td>Documentation to be provided: Identification; documents supporting your exemption requests, for example proof of employment, medical documentation</td><td>வழங்க வேண்டிய ஆவணம்: அடையாளத்தை உறுதிசெய்வதற்கான ஆவணங்கள்; விதிவிலக்குக்கான உங்கள் கோரிக்கையை ஆதரிக்கும் ஆவணங்கள், எடுத்துக்காட்டாக வேலைவாய்ப்புக்கான ஆதாரம், மருத்துவ ஆவணங்கள்</td></tr>
</table>